பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி

VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2001) தொலைபேசி: 3378 ஒலி: 197

★ வன்னிக்கான பொருளாதார

## தடை நீக்கம்; யுத்த நிறுத்தம் ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்?

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்கும் விசேட அறிவித்தல் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா மிக விரைவில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியால் வெளியிடப்படவுள்ள வன்னிக்கான பொருளாதாரத்தடை நீக்கஅறிவித்தலுடன் யுத்தநிறுத்தம் தொடர்பான அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்படலாம் என்றும் ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒரு சிலவற்றையாவது நடைமுறைப் படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி கருதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது இவ்வாறிருக்க நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே ஜனாதிபதி இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொள்ளவிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## யாழ். புனரமைப்புக்கு 800 லட்சம் ரூபா

### அமைச்சர் டக்ளஸ் எடுத்து வந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும்புனர்வாழ்வு, புனரமைப்புநடவடிக்கைகளுக்கு 800 இலட்சம் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செலவிடவுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட அபி

(8-ம் பக்கம் பார்க்க)

## ரவூப் ஹக்கீம் - பேரியல் இன்று சந்திப்பர்

(கொழும்பு)

முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் இன்று தேசிய ஐக்கியமுன்னணியின் தலைவி திருமதிபேரியல் அஷ்ரப்பை சந்தித்துப்பேசவுள்ளார்.

இச்சந்திப்பின் போதுமுஸ்லிம்காங்கிரஸின் தலைவராக திருமதி பேரியல் அஷ்ரப் நியமிக்கப்பட்ட செய்தியை ரவூப்ஹக்கீம் நேரடியாகத் தெரிவிப்பார்.

இதேவேளை முஸ்லிம்காங்கிரஸின் தவிசாளர்பதவியை திருமதி அஷ்ரப் ஏற்பதற்கு

(8-ம் பக்கம் பார்க்க)

### மட்டுவில் வண்ணாத்திப் பாலத்தில்

# புலிகள் கிளைமோர் தாக்குதல்

# இராணுவ வாகனம் சிதறுண்டது!

## 6 படையினர் பலி; 23 பேர் படுகாயம்

(நமது நிருபர்)

புத்தூர் மட்டுவில் வீதியில் வண்ணாத்திப் பாலத்தில் விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் சிதறியதில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்தில்கொல்லப்பட்டனர். 23க்குமமேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்துமுள்ளனர்.

படுகாயமடைந்த இராணுவத்தினர் உடனடியாக பலாலிஇராணுவவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசமான புத்தூர்-மட்டுவில் வீதியில் வண்ணாத்திப்பாலத்தில் இடம் பெற்ற இக் கிளைமோர்த் தாக்குதல் சம்பவம் படைத்தரப்பில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விடுமுறையில் வீடுகளுக்குச் செல்வதற்காக பலாலி விமானத் தளத்திற்குச் சென்ற

(8ம் பக்கம் பார்க்க)

### மருதானைசோதனைச்சாவடியில்

## இளம் தமிழ் பெண் மீது பாலியல் வல்லுறவு!

(கொழும்பு)

கொழும்பு மருதானை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள சோதனைச்சாவடியில் 28 வயது இளம் தமிழ்ப்பெண் ஒருவர் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான மலையகத்தைச் சேர்ந்த தமிழ்பெண் ஒருவரே நேற்று முன்தினம் இரவு மருதானை சோதனைச் சாவடியில் வைத்து காவல் கடமையில் இருந்த பொலிசாரினாலும், இராணுவத்தின

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விமானஏவுகணை; நீர்மூழ்கிக்கப்பல்

### புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமானப்படைக்கும், கடற்படைக்கும் பாரிய அச்சுறுத்தலை கொடுக்கக் கூடிய நவீனரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளும், கண்ணுக்குப் புலப்படாதவாறு நடுக்கடலில் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய நீர்மூழ்கி கப்பல்களும் விடுதலைப்புலிகளிடம் இருப்பதாக புலனாய்வுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின

(8-ம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயண அனுமதி கொழும்பிலும் பெறலாம்

(கொழும்பு)

காங்கேசன் துறைக்கும் திருமலைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள சிற்றிஒவ்றிங்கோ கப்பலுக்கான பயணச்சீட்டுக்களை கொழும்பில்பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் யாழ்ப்பாணம்செல்லும் பயணிகள் திருமலைக்குச் சென்று பயணவிண்ணப்பம் கொடுத்தே அதற்கான அனுமதியை பெற்றனர்.

ஆனால் புதியநடைமுறையின்படி யாழ்ப்பாணம் வருகை தரும் பயணிகள் கொழும்பில் உள்ள பொலிஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

### அரசுக்கு எதிராக

## ஆர்ப்பாட்டம் நடத்த ஐ. தே. கட்சி திட்டம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணி மீது ஐக்கியதேசியககட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது நாட்டின் சகல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஐக்கியதேசியக்கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனை அடுத்து தலைநகர் கொழும்பு உட்பட பலபகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு பலப்படுத்தி வருகிறது.

இதேவேளை ஐக்கியதேசியக்கட்சி நடத்த உத்தேசித்துள்ள ஆர்பாட்ட ஊர்வலம்

(8ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசியல்கட்சிகள் முன்வர வேண்டும்

### பேராசிரியர் வஜ்ஜிரதேரர் அழைப்பு

(கொழும்பு)

நாடுதற்போது எதிர் நோக்கும் இக்கட்டான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சித்தலைவர்களும் கருத்து முரண்பாடுகளை மறந்துசமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லஒன்று சேர வேண்டுமென்று பேராசிரியர் கும்புறுகமகே வஜ்ஜிரதேரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் சமாதானத்தையேற்படுத்த சகல முயற்சிகளையும் எடுத்துவருகிறார். சமாதானத்திற்கான வாய்ப்புக்களும் அதிகரித்து காணப்படுகிறது இச்சந்தர்ப்பத்தில், பிக்குகள், மதகுருமார்கள்,

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிய கட்டடம் அமைப்பு

(புலோலி)

மந்திகை கம்பன் சனசமூக நிலையத்திற்கு சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புதியகட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன மந்திகை பொத்தணி வீட்டுத் திட்டத்தின் கீழ். அமைக்கப்பட்ட 33 வீடுகளுக்கான பொதுத் திட்டத்தின் கீழ் இச் சனசமூக நிலையக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச் சனசமூக நிலையம் வெகு விரைவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் திறந்து வைக்கப்படவுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (உ-52)

## தொழிற்றுறை திணைக்கள கைப்பொருள்கள் கண்காட்சி

# செப்ரெம்பர் மாதம் வவுனியாவில்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் வருடந்தோறும் நடத்தி வரும் மாகாண மட்ட கைத்தறிப் புடவை, கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி இவ் வருடம் செப்ரெம்பர் மாத முற் பகுதியில் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இக் கண்காட்சியில் பங்குகொள்ள விரும்பும் கைவினையாளர் தங்கள் பகுதிப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்வதுடன் கண்காட்சிக்கு வைக்கவுள்ள கைவினைப் பொருளையும் எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காட்சிப் பொருட்களில் உற்பத்தி செய்தவர் பெயர், முகவரி, பொருளின் பெயர், பெறுமதி ஆகிய விபரங்கள் ஒட்டப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விபரம் பெற விரும்புவோர் யாழ். செயலகத்தில் அமைந்துள்ள தொழில்துறை திணைக்கள அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என வடக்கு- கிழக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் செ இரேனியஸ் தெரிவித்தார். (உ-6)

## வீதி திருத்தம் இல்லை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் வடக்கிலிருந்து நிலாவரைக்குச் செல்லும் வீதி[மஸ்கன் றோட்] கடந்த பல வருடங்களாகத் திருத்தப் படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியால் செல்வோர் பல அசெளகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-104)

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு. பாடசாலையின் கனடா பழைய மாணவிகள்சங்கம் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி மற்றும் உபகரணங்களை அனுப்பி வைத்துள்ளதாக அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தெரிவித்தார். (உ-52)

## அடகுவைப்பரே! மூச்சிற்கு!

வைன் கொடுத்த பொம்மை அதுபோன்று
அராக்கை கால் அடித்தால் சிரிப்பார்
சிந்தை தடுமாற விஸ்கி, பிராண்டி
வோட்கா, ஜின் என்று மூளைமுடுக்கெல்லாம்

புதுக்கீதை பலபேசும் புனிதர் அவரவர்
தொழிலில் பாதிப்பும், செலவில் அதிகரிப்பும்,
குற்றம் பலசெய்யும், குடும்பம் பிளவுகொள்ளும்.
விபச்சாரமும், விபத்தும் தற்கொலைக்கே சென்று
விடும்

கையில் காசின்றி கடைதெருவாய் அலைந்துவிட்டு
கைகொடுக்கும் கசிப்பிற்காய் கடைசி முதலீடு
கொஞ்சக் காசென்று காய்ச்சும் வீடுகளில்
அடகு வைப்பாரே! உயிரின் மூச்சிற்கு!

ம. பிரேமலதா
க. கு. அ. இல. 153

★ போதைப்பொருள் ஒழிப்புத் தினம் இன்று ★

## அரசைக் கவிழ்த்த பழி முஸ்லிம்கள் மீது வரக்கூடாது

### ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசைக் கவிழ்த்த பழி முஸ்லிம் சமுதாயத்தின் மீது வரக்கூடாதென்பதற்காகவே பதவியில் இருந்து விலகிய பின்னரும் அரசைக் கவிழ்ப்பதற்கு துணை போகாமல் திருமதி பேரியல் அஷ்ரப் தலைமையில் அரசுக்கு ஆதரவளிப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

காத்தான் குடியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் நான் முஸ்லிம் காங்கிரஸை விட்டு விலகமாட்டேன் என்றும் குறிப்பிட்டார். (உ-7)

## வெற்றிடமாகியுள்ள 21 அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகள்

### ஹக்கீம் நீக்கப்பட்டதன் எதிரொலி

(கொழும்பு)

• ரவூப்ஹக்கீம் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 21 அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகள் வெற்றிடமாகியுள்ளன.

இதுவரை எம்.எல் ஏ எம். ஹிஸ்புல்லா, முசாமில், ரீ.கே. அசூர், எஸ். சுபைதீன் எம் ஐ ரபீக். அசித்த பெரேரா, பாருக் மஜீத், எஸ்.எஸ். ரஜாவுடீன், அப்துல் சலாம் ஆகியோர் தத்தம் நிறுவனங்களின் தலைமைகளிலிருந்து விலகியுள்ளனர்.

குவைத், கென்யா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்கள் குர்த்தூஸ், எச்.எம். பாரூக் ஆகியோரை இராஜினாமா செய்யும்படி கோரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ)

## இராசி பலன்

26- 6- 2001
(ஆனி 12- செவ்வாய்)
பஞ்சமி காலை 7. 02 வரை
சஷ்டி பி. இ 4. 38 வரை
மகம் மு. ப 11. 47வரை
ராகுகாலம்- 2. 55- 4. 25
நல்ல நேரம்- 10. 25- 11.55
குமார சஷ்டி விரதம்

**மேடம்**
மனச்சோர்வு, சகோதரர் உதவி, வியாபார மேன்மை, காரிய தாமதம்.

**இடபம்**
உடல் நலம் குன்றல், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், மனச்சஞ்சலம்.

**மிதுனம்**
அன்னியர் சந்திப்பு, இனிய சம்பவம், வாக்கு மேன்மை, தனவரவு.

**கடகம்**
மதிப்புக் குறைவு, வீண் விவாதம், பொருள் விரயம், காரிய தாமதம்.

**சிங்கம்**
மதிக்கப்படுதல், அமைதியான நிலை, காரிய நன்மை, சயனசுகம்.

**கன்னி**
பிரயாணம், தொழில் நன்மை, வீண் கோபம், சுப செலவு.

**துலாம்**
நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை தெய்வ சிந்தை, காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
உத்தியோகச் சிறப்பு, நல்ல செய்தி, முயற்சி கைகூடும்., பெரியோர் வெறுப்பு.

**தனுசு**
பிரயாணம், அச்சமான நிலை, உடல் உழைபபு, புதிய திட்டமிடல்.

**மகரம்**
வீண் பிரச்சினை, பிரயாண பயம், காரிய தடங்கல், எதிர்பாராத சில நன்மை.

**கும்பம்**
உல்லாசம், நல்ல உணவு கிடைத்தல், குடும்ப சுகம், காரியம் கைகூடும்.

**மீனம்**
சத்துருஜெயம், உடல்நலம். காரிய நன்மை, மனமகிழ்ச்சி,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மாணிக்கவாசகர் குருபூசைத் தின கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், யா/பூம்புகார் அ.த.க பாடசாலை, யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை என்பன இணைந்து நடத்திய மாணிக்கவாசகர் குருபூசைத் தினக் கட்டுரைப்போட்டி முடிவுகள் வருமாறு,

முதலாம் இடம் மு விக்கினேஸ்வரி யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை, இரண்டாம் இடம், சு. நிர்மலா யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் மூன்றாம் இடம் ம. சுபாசினி யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

இத்துடன் 10 பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (உ)

## உளவளபயிற்றுவிப்பாளர் பயிற்சி நெறி ஜூலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சாந்தியகம் உளவளத் துணை நிலையத்தினால் யுனிசெவ் ஆதரவில் எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி முதல் உளவள பயிற்றுவிப்பாளர் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளன.

கடந்த மாதம் நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையில் இருந்து 15 பேர் இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சுமார் 9 மாதங்கள் இடம் பெறவுள்ள இப்பயிற்சி நெறி முடிவுற்ற பின்னர், பயிற்சி பெற்றவர்கள் சமூக மட்டத்தில் தமது பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பர் என நிலையத்தின் தலைவர் ந. கனகரட்ணம் தெரிவித்தார். (உ-6)

## நிவாரண அனுமதிப் பத்திரங்கள் விநியோகம்

### யாழ் பிரதேசசெயலர்பிரிவில்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலர் பிரிவில்லிருந்து இடம்பெயர்ந்து சென்று அண்மையில் மீளவும் குடியேறிய மக்களின் நிவாரண அனுமதிப் பத்திரங்கள் யாழ். பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சென்று மீளவும் குடியமர முடியாமல் உள்ள மக்களுக்கான நிவாரண அனுமதிப்பத்திரங்கள் யாழ். பிரதேச செயலகத்தினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

மே மாதத்திற்குரிய உலர் உணவு விநியோகத்திற்கான நிவாரண அனுமதிப்பத்திரங்களே தற்போது விநியோகிக்கப்படுவதாகவும் ஜூன் மாதத்திற்கான நிவாரண விநியோகப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கூடிய விரைவில் இந் நிவாரணம் விநியோகிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை யாழ். பிரதேச செயலகத்தில் நிவாரண அனுமதிப் பத்திரங்களைப் பெறாதவர்களை உடன் பெற்றுக்கொள்ளுமாறும் செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ-01)

## நல்லூர் ஆலய சூழலில் பாதீனியம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதிப்பகுதியில் உள்ள வெற்றுக்காணியில் பாதீனியக் களைகள் அதிகளவில் பரவிவருகின்றன.

இக்களைகள் விரைவில் அழிக்கப்படாவிடின் அப்பகுதியில் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தும் என விவசாய ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர் எஸ். இராசையா தெரிவித்தார். (உ-15)


## காரைநகர் சிவன் கோவில்
### ஈழத்துச் சிதம்பரம்
## ஆனி உத்தர விஞ்ஞாபனம்

விக்கிரம வருடம் ஆனி மாதம் 13ம் நாள் புதன் கிழமை (27-06-2001) அதிகாலை 3 மணிக்கு நடேசர் அபிஷேகம் தொடர்ந்து 14ம் நாள் வியாழக்கிழமை (28-06-2001) உதயம் நடேசர் ஆனி உத்தர தரிசனம் மாலை நடேசர் திருவீதி உலா உற்சவம் 3.00 மணியளவில் நடைபெறும்.

இங்ஙனம்
ஆதீன கர்த்தாக்கள்

[3279]

## அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுமானால்

# சமாதானக் கதவு மூடப்பட்டுவிடும்

### எச்சரிக்கிறார் அஸ்ஜஜ்ஜரிய தேரர்

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசு கவிழ்க்கப்பட்டால் நாட்டின் சமாதானக் கதவு மூடப்பட்டு விடும்.

இவ்வாறு சர்வமத சமாசான நிலையத்தின் நிறைவேற்றுச் செயலாளர் அஸ்ஜஜ்ஜரிய தேரர்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது இலகுவான விடயம். ஆனால்,மக்கள் மனதில் நம்பிக்கையை வளர்ப்பது மிகக் கடினம்.

இன்றைய நெருக்கடியான சூழலினால் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசொன்றைஅமைப்பதே சிறந்தது.இதன் மூலம் விடுதலைப் புலிகளிடம் சமாதானத்தில் நம்பிக்கை ஏற்படுமென்று கூறியுள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகளின் பிடியால் பணயக்கைதியாக இருப்பதை விடுத்து தேசிய அரசொன்றை அமைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முன்வருமாறும் தேரர் பெரும்பான்மைக் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

---

## சத்துணவு பெறத் தகுதியான மாணவர்களை தெரிவுசெய்யகுழுஅமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் யாழ். மாவட்டத்திலுள்ள படசாலை மாணவர்களில் சத்துணவு பெற்றுக் கொள்ளத் தகுதியான மாணவர்களை தெரிவதற்குரிய குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 9 ஆயிரம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் சத்துணவு வழங்கப்படவுள்ளதால், சத்துணவுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களை சரியாகத் தெரிவு செய்வதற்கு இக்குழு அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வலயம் அல்லது கோட்ட மட்டத்தில் மாணவர்கள் தெரிவுசெய்வதற்கு பிரதேச செயலர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள், பொதுச் சௌக்கிய அதிகாரி, அமைச்சரின் நேரடிப் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அமைச்சருக்கு சத்துணவுபெறத் தகுதியுடையவர்களது பெயர்ப் பட்டியல் அனுப்பப்பட்டிருப்பினும், இப பெயர் பட்டியல் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை உள்ளடக்கிய புதியபெயர்ப்பட்டியலைதயாரிக்கும்படி அமைச்சு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (உ)

---

## தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

கணவனுடன் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக நிறைமாதக் கர்ப்பிணித் தாய் ஒருவர் தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்ய முயன்ற சம்பவம் நேற்றுக்காலை புங்குடுதீவில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 25 வயது இளம் குடும்பப்பெண் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் டட்டுள்ளார். (உ-104)

## அரியாலைப் பகுதி சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் அரியாலையில் சில பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும சேர்ந்து சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

கனகரத்தினம் மகாவித்தியாலயம் நாவலர் வீதியில் சில பகுதிகள் புங்கங்குளம் பகுதி, கலைமகள் வீதி முதலியன இச்சுற்றிவளைப்புக்குள்ளாகின.

அதிகாலை முதல் இராணுவத்தினர் பொதுமக்கள் எவரையும் வெளியேற விடமால் தேடுதலை மேற்கொண்டனர்.

கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகள் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## நூலகதிங்கள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் இம்மாத இறுதிவரை 'நூலக திங்கள்' நிகழ்வு நடைபெறுகின்றது. (செ)

## வடிகால்கள் செப்பனிடல்

(கல்வயல்)

யாழ்.மாநகர சபையினால் வடிகால்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன:

வண்ணார் பண்ணை, நல்லூர்ப் பகுதிகளில் குறித்த செப்பனிடும் பணி நடைபெற்று வருகின்றன; (உ-111

---

## மாவைக் கந்தன் உற்சவ காலங்களில் விசேட பஸ்சேவை

(ஏழாலை)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, உற்சவ காலங்களில் விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளன.

இது சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழையில் 515 வது படையணிக்கட்டளை அதிகாரியின் தலைமையில் நடைபெற்றது:

விசேட உற்சவதினங்களில் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும்,

ஆடி அமாவாசையன்று தெல்லிப்பழையிருந்து கீரிமலை செல்வதற்குப் ஒழுங்கு செய்வதாகவும் இக் கலந்துரையாடலில்முடிவு செய்யப்பட்டுள்ளது. (செ-12)

---

## துபாயில் இருந்து துப்பாக்கி உதிரிப்பாகம் கடத்தி வந்தோர் கைது

[கொழும்பு]

துபாயிலிருந்து துப்பாக்கி உதிரிப்பாகங்களுடன் வந்த இலங்கையர் மூவரை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கடந்த வியாழனன்று சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அன்றைய தினம் பாகிஸ்தானில் இருந்து ஆபாச சி.டி. தட்டுக்களை கடத்தி வந்த அந்நாட்டவர்கள் 5பேரும் சுங்க அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் விசாரணைகளின் பொருட்டு தற்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [உ]

---

# இந்திய மீனவர்கள் விடுதலைக்கு இந்துப் பேரவை பாடுபடும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் கைது செய்து செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 மீனவர்களின் விடுதலைக்குச் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்த ஆவன செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது;

அண்மையில்மேற்படிமீனவர்களைச் சந்தித்து தேவையான பொருட்ளை வழங்கிய வட பிரதேச இந்துப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் வணிகர்களிடம் மீனவர்கள் தமது விடுதலைக்கு உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொண்டனர்;

அதற்கு அவர்கள்; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் தூதுவராலயம், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க, தமிழ் நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோருடன் தாம் தொடர்பு கொண்டு விடுதலைக்கு உதவுவதாக உறுதியளித்தனர்; (உ)

---

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 6 ஆம் நாள்

# 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### அமுதளித்து அருள்கொடு!

காற்றெழும்பிக் கடலலைகள் கதிகொண்டு கலக்காமல்
போற்றவரும் அடியார்கள் புத்துணர்வாய் வருவதற்கு
ஆற்றிவிடு நாகம்மே! அமுதளித்து அருள்கொடுத்து(த்)
தோற்றிவிடு தெவிட்டாமல், திருநயினை திருப்தியுற

நயினைச்சோதி

### நயினை அம்பாள்பாமாலை

தாயாகி என்னை வளர்த்து தரணியிலே
புகழோடு வாழ வைத்ததாயே
சேயாகி அலை கடல் நடுவே தேடி வரும்
பக்தர்கள் குறை நீங்க அருள் புரிவாய்
வீதி வலம் வரும் எழில் காட்சி கண்டு மெய்மறந்து
நின்றவர்க்கு அருட்காட்சி காட்டிடுவாய்
விதியை நொந்து வாழும் எம்மக்கள்
துயர் நீங்க வழியொன்று காட்டிடம்மா

கண. ஜீவகாருண்யம்

### தாயே துயர் நீக்கு!

கூற்றம் உயிர் குடித்துக் கொலையுண்ட மாந்தருடல்
நாற்றமின்னும் நம முகத்தில் நன்றாயடிக்கிறதே!
காற்றில் கலந்தெங்கள் காதுகளையின்னுமந்தச்
சீற்றம் பிடித்த 'ஷெல்' சத்தம் சேருதே!

ஊற்றெடுக்கும் பக்தியுடன் உனையிறைஞ்சி வேண்டுகிறோம்!
போற்றிப் புகழ்ந்து 'பூஷணி' யாமுன்னையிங்கு தொண்டர்நாம்
ஏற்றியிசைக்கின்றோம்! நம், இன்னல் நிறை வாழ்வில்
மாற்றமருள்வாய்!, நமையெல்லாம் ஏற்றம பெறச் செய்வாய்!

கல்வயல் பிரேம்
க.கு.அ,85

### நயினையின் அம்மாவே வா

நயினையின் அம்மாவே- நம்தமிழர்
நலிவு போக்க ஆடிவாராய்
விரிந்தாடும் துர்ராகம் அறுக்க- வெள்ளை
மனத்தின் நாகத்தாயே விரைந்து வாராய்

தொல்லை வினை நீக்கி- சூழ்ந்த
ஊழின் பிணி விரட்ட அசைந்து வாராய்
மங்கள வாழ்வு பொங்க- சிவனின் நாயகி
நீ கருணைக கண் திறந்து ஓடிவாராய்.

கனகசபாபதி றனேஸ்
க.கு.அங்.இல- 26

### ஆதரித்து அருள்புரிவாய்

நாற்புறத்து அலைகளெலாம் உன்புகழ் பாட
நான்குமறைப் பொருள்களெலாம நின்னருள் கூட
காற்சதங்கை ஆர்ப்பரிக்க நடமிடுந் தாயே!
காத்தருள்வாய் தமிழரெமை நாகபூஷணித் தாயே!

நாடோடி வாழ்க்கையினைத் தவிர்த்திடவே
நற்பண்புப் நலவாழ்வும் மிழந்துதுயர் சூழ
ஓடோடி நாம்வந்தோம் பெற்றவளே- தாயே!
ஆதரித்து அருள்புரிவாய் நின்சேய்கள் எமக்கு.

நீர்வேலியூர் வி. பராபரன்
க.கு.இல- 2

---

## பெற்றோல் பற்றாக்குறை சில தினங்களில் நீங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நிலவுகின்ற பெற்றோல் பற்றாக்குறை நிலை ஓரிரு தினங்களில் நீங்குய எனப் பெற்றோலியக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரு மாதங்களாக எரிபொருட கப்பல் யாழ். குடாநாடு வருவதில்ஏற்பட்ட தாமத நிலை காரணமாகவே இப்பற்றாக்குறை நிலவுகின்றமை தெரிந்ததே.

வழமையாகமாதத்தில் இரு தடவைகள் இடம் பெறும எரிபொருள் கபபல் சேவையின் போது ஒவ்வொரு தடவையும குடா நாட்டிற்கான ஆயிரதது 500 பரல் பெற்றோல் எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

இச் சேவையானது ஒழுங்கான முறையில் நடைபெறுமாயின இத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும், குடா நாட்டினைப் பொறுத்தவரையில் பெற்றோல பாவனை அதிகரித்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்புக்கு ஏற்ப பெற்றோலைக் கூடுதலாக அனுப்பி வைக்குமாறு உரிய இடங்களில் கேட்கப்பட்டதாகவும், இது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் இன்று வரையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

அத்துடன் மற்றைய எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்; குடாநாட்டுக்கான எரிபொருட்கள் கப்பல்சேவை இம்மாதம் ஆரம்பத்தில் இறுதியாகஇடம் பெற்றதென்பது தெரிந்ததே. (உ-10)

### வடமராட்சி கிழக்கில் வாரத்தில் 3 தினங்கள்

# நடமாடும் மருத்துவ சேவை; தொற்று நோய் அபாயத்தை எதிர் கொள்ளவும் நடவடிக்கை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை ஏற்பாட்டில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடமாடும் மருத்துவ சேவை இடம்பெற்று வருகிறது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை டாக்டர் எஸ் யோகேஸ்வரி தேவர் இங்கு மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றார்.

இந்த நடமாடும் மருத்துவ சேவையின் போது, காய்ச்சல் நோய்ப் பரிசோதனை உடனுக்குடன் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

இரத்தப் பரிசோதனைக்கான உபகரணங்களை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் தொற்று நோய் அபாயம் அதிகரித்துள்ளதை அடுத்து சுகாதாரப் பரிசோதகர்கள் அதனைக் கட்டுப்படுத்த முனைப்புடன் செயற்பட்டு வருகின்றதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை,

மேற்படி பகுதியில் உள்ள அம்பன் வைத்தியசாலை கடந்த காலப் போர் அனர்த்தங்கள் காரணமாக இயங்காதிருந்ததால் அப் பகுதி மக்கள் மிகுந்த இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பாரதி வீதி பத்தமேனி என்ற முகவரியைச் சேர்ந்த இராசையா மகேஸ்வரி என்பவரது விசேட அடையாள அட்டை வழியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப்பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

கந்தரோடை வற்றாக்கை விஸ்வநாத விசாலாட்சி ஆலய மஹோற்சவத்தை யொட்டி இக்கவிதை வெளிவருகிறது

## வீதிவரும் அழகென்னே!

**எடுப்பு**

ஓடிவரும் வழுக்கை யாற்றின்
ஓரமதில் கோயில் கொண்டே
தேடி வரும் அடியவர்க்கு
தேன முதம் தருபவளே

**தொடுப்பு**

ஆடி வயல் உழுவோர்க்கு
அள்ளி வளம் கொடுப்பவளே
பாடி வயல் கந்தரோடை
வற்றாக்கை அம்மையே

**முடிப்பு**

விஸ்வ நாத விசாலாட்சி
சேர்ந்திருக்கும் வற்றாக்கை
பசும் பால் இளநீரும்
பழ வகைகள் அபிடேகம்
விசும் பேறு ஓமகுண்டம்
நெய் யெரி ஆகுதியும்
பசும் பொன் அலங்காரம்
வீதி வரும் அழகென்னே!

கவிஞர் துரைபார்

---

## வருடாந்த உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரணவாய் வெற்றி காட்டுப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை இரதோற்சவமும், 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும், 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வண்ணை வடகிழக்கு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்றும் தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று தேர்த்திருவிழாவை யொட்டி அன்னதானம் வழங்கப்படும். (செ-104)

---

(இன்று கோண்டாவில் கிழக்கு ஆசிமடம் அரசடி விநாயகர்தேர்)

## தேரேறி வருகின்றார்

தேரேறி வருகிறார் பிள்ளையாரே
சித்தத்தில் இருப்பவரே பிள்ளையாரே
உலகாளும் தேவரே பிள்ளையாரே
உய்ய வழி காட்டிடுவாய் பிள்ளையாரே

கோண்டாவில் பதியில் மேவும் பிள்ளையாரே
குறைகள் தீர்க்கும் நல்ல பிள்ளையாரே
அற்புதங்கள் பல செய்யும் பிள்ளையாரே
அடியவருக்கு அருள்புரிவாய் பிள்ளையாரே

ஆசிமடத்தில் உறைபவரே பிள்ளையாரே
அல்லலைப் போக்கிடுவாய் பிள்ளையாரே
அரசடியில் வீற்றிருக்கும் பிள்ளையாரே
அன்பரைக் காத்திடுவாய் பிள்ளையாரே

ம. மதிச்செல்வி
சுது குः அः இல: 08

(இன்று கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கொடியேற்றம்)

## இன்று கொடியேறுகிறான்

விக்கினங்கள் தீர்த்து வைக்கும் விக்னவிநாயகனாய்
வியாபகமாய் கோவையிலே கோயில் கொண்டருளி
வெற்றியுடன் அடியவர் தம் வேட்கை தணிக்கும்
வெள்ளெருவை விநாயகன் இன்று கொடியேறு
கிறான்.

மு. விக்னேஸ்வரன்

---

# நெல்லியடிச் சந்தை விரைவில் புதிய இடத்தில்

## இட நெருக்கடி காரணம்

(புலோலி)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் நெல்லியடிப் பொதுச் சந்தை. பாவனையாளர்களின் நெருக்கடி நிலைமைகளை நீக்குவதற்காக இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

நவீன சந்தை, மீன் சந்தை மற்றும் கடைத்தொகுதிகளை நிர்மாணிப்பதற்கென சபை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்குச் சற்றுத் தொலைவில் வீதிக்கு வடக்குப் புறமாகவுள்ள 22பரப்புக் காணியை 99 வருட குத்தகைக்கு வேதாரணியேஸ்வரா ஸ்ரீ ஆதிவாரமடச்சபை நிர்வாகத்திடமிருந்து குத்தகைக்குப் பெற்றுள்ளது.

மேற்படி சந்தைகளையும் கடைத் தொகுதிகளையும் கட்டுவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிச் சந்தையில் தற்போது மக்கள் பெரும் இட நெருக்கடிகளுக்குள்ளாகி வருவதாகவும், இதனால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகுவதாகவும் தெரிவித்த இப்பகுதி மக்கள் இச்சந்தைகளை மாற்றுவது வரவேற்கப்பட வேண்டியதாகும் எனவும் தெரிவித்தனர். (உ-52)

# செபமாலை மாதா ஆலய புனரமைப்புக்கு அமைச்சர் 1 இலட்சம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் மக்கள் மீண்டும் மீளக் குடியமர்ந்துள்ளதையடுத்து. அப்பகுதியிலுள்ள ஏ வி வீதியில் அமைந்துள்ள செபமாலை மாதா தேவாலய புனரமைப்புக்கு 1 இலட்சம் ரூபா நிதியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஏ. வி. வீதியிலுள்ள செபமாலை மாதா தேவாலயப்புனரமைப்புக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஆடி மாதம் செபமாலை மாதாஆலயவருடாந்த உற்சவம நடைபெறவுள்ளதால், இப்பகுதியில் வளர்ந்துள்ள பற்றைகளை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்துவதற்கு ஈ.பி.டி.பி யின் யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளரும் யாழ். மாநகர சபைஉறுப்பினருமானறீகன்நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத் தொகுதி அபிவிருத்தித் தொண்டர்கள் இச் சிரமதானப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும், கொழும்புத்துறைப் பகுதியில் மேலும் சில பகுதிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாட்டில் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

அடுத்த மாதம் 2ம்திகதி திங்கட் கிழமை அம்மன் வீதி உலாவுடன் மஹோற்சவம் நிறைவடையும் இதை யொட்டி நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் அன்று இடம்பெறவுள்ளது.

(உ-15)

## மஹா கும்பாபிஷேகம்

(ஏழாலை)

தொல்புரம் மேற்கு பன்ன தோட்டம் அருள்மிகு ஸ்ரீ ஜெகஜோதி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் எதிர் வரும் யூலை மாதம் 2ம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 00மணிமுதல் நண்பகல் 12.00மணிவரையும் நடைபெறவுள்ளது. [செ-12]

## இன்று தேர்த்திருவிழா

(ஏழாலை)

ஏழாலை புங்கடி அருள்மிகு சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. [செ-12]

# அராலி வடக்கிற்கு மின் விநியோகம் இல்லை

## பொதுமக்கள் கவலை

(ஈச்சமோட்டை)

அராலி வடக்குப் பகுதிக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படாததையிட்டு அப்பகுதி மக்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் மின்இணைப்பு வழங்குவதற்கான மின்கம்பங்கள் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

இதுபற்றி உரியவர்களுக்கு பலமுறை எடுத்துக் கூறிய போதிலும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் இதனால் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (செ-59)

# வீதியால்சென்ற பெண்கள் விபத்தில் காயம்

(மந்திகை)

வீதியில் விதிகளை மீறிச் சென்று கொண்டிருந்த வேளை இராணுவ உழவு இயந்திரத்துடன் ஏற்பட்ட விபத்தில் பலத்த உட்காயங்களுக்கு உள்ளான நிலையில் இரு பெண்கள் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தசனியன்றுகரவெட்டி நாவலர் மடத்தடியில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில்,

கரணவாய் தெற்கு மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்துரை சுகிர்தா (வயது 19) பரஞ்சோதி சுமதி (வயது 19) ஆகிய இருவருமே பலத்த பாதிப்புக்குள்ளானவர்களாவர். (உ-23)

### வடக்குகிழக்கில்

# தமிழ்மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் தாராளம்

## அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாண தமிழ்மொழிமூல பாடசாலைகளில் ஐயாயிரத்து இருபத்து நான்கு ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள்உள்ளன.

இருபத்துமூவாயிரம் தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கான தேவை வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் உள்ள போதும் 18 ஆயிரத்து நானூற்றுஐம்பது ஆசிரியர்களேசேவையிலுள்ளனர்.

இதேபோல்1539அதிபர்களுக்கான தேவையுள்ளபோதும் 1058 அதிபர்கள் மாத்திரமே சேவையாற்றுகின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கிலுள்ள சிங்கள மொழிமூலமான பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவ்விபரங்கள் மாகாண கல்வித்திணைக்களத்தின் அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளன. (செ8

## இன்று ஒரு தகவல்

# போதை வஸ்து பாவனை

இன்றையயுகத்தில்போதைப் பொருட்களின் பாவனை, அதிகரித்துக் கொண்டே வருகிறது. போதைப் பொருட்களின் பாவனை, கட்டுபபாடின்றி அதிகரித்துக் கொண்டே போகுமானால் மனித இனமே ஒரு காலத்தில் அழிந்தொழிந்து போகும் என்று கருதுவதில்தவறில்லை.

போதைப் பொருட்கள் என்றால் என்ன? சுருங்கக் கூறின் ஒருவரது மனநிலை, உணர்வாற்றல், சுயநிலை, ஆகியவற்றில் மாறுதலை ஏற்படுத்துவதற்கென முறை தவறிப பாவிக்கப்படும் ஒரு இரசாயனப் பதார்த்தமாகும்.

அபின், கஞ்சா போன்றவை பழங்காலந் தொடக்கம் புழக்கத்தில் இருந்துவரும் போதைப் பொருட்களாகும். இன்று ஹெரோயின், எல்.எஸ்.டி. பெதடின் போன்றவை நம் மத்தியில் உலாவும் போதைப் பொருட்களாகும்; இவற்றைக் கடத்தி வியாபாரம் செய்வதையே சிலர் தம் தொழிலாகக் கொண்டுள்ளனர். இச் செயலுக்கு ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் தடை விதித்திருக்கிறது. இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு கடுந்தண்டனை விதித்து இச்சட்ட விரோதிகளின் செயலைக் குறைக்க முற்படுகின்றது. எனினும் இத்தொழிலின் மூலம் அதிக பணம் சேர்த்து சுகங்கண்டோர், இத்தனை இடையூறுகளின் மத்தியிலும இத்தொழிலையே தொடர்ந்து செய்து வருகின்றனர்.

போதைப் பொருட்களை ஒரு முறை பயன்படுத்தினால் தொடர்ந்து பயன்படுத்த மனிதன் தூண்டப்படுகின்றான். ஆகவே, அவற்றைப் பாவிப்பவர்கள் பலரும் நிரந்தர வாடிக்கையாளராகி விடுகின்றனர். இலகுவாகக் கிடைத்தபோது ஈர்க்கப்பட்டு போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் மனிதன், பின் அதன்பொருட்டுதன் பொருட்கள்முழுவதையும் இழக்கத் தயாராகின்றான். கையிலுள்ள பணம் முழுவதையும் இதற்காகச் செலவு செய்பவன்; வறுமையின்பிடியில்சிக்குகிறான்; அவன் மட்டுமல்ல, அவனால் அவனது குடும்பமே வறுமையில் சிக்கநேரிடுகிறது. அத்துடன் போதைக்காக அவன்பாதை மாறவும் செய்கிறான்; போதைப் பொருட்களுக்காக பணத்தை பெற வேண்டுமென்ற பயங்கர வெறியில் பஞ்சமா பாதகங்களையும் செய்யச் சித்தமாகின்றான். கொள்ளையடித்து, ஏன் கொலை செய்து கூடப் பணத்தைப் பெற முனைகிறான். போதை ஏற்பட்ட நிலையில் அவனை வசப்படுததிக் கொலை முதலிய குற்றச் செயல்களையும் செய்ய வைக்கலாம். இவ்வகையில் அவன் ஓர் சமூக விரோதியாக மாறிவிடுகின்றான். சமூகத்திற்கு மட்டும் அவன் விரோதி ஆவதில்லை தனக்குமே விரோதியாகின்றான். ஆம் ...! இளமைப் பருவத்திலேயே உடல் நலங் குன்றி வயோதிபன் போல் கை கால்கள் நடுங்கும். அவனது கோலத்தைக் காணவே பரிதாபமாயிருக்கும். அவனுடல் நரம்புத் தளர்ச்சியால பாதிப்படைகிறது. அத்துடன் நோய் எதிர்ப்பு, நிலை குன்றிப் பல்வகை நோய்களை ஏற்கும் ஏது நிலை அடைகிறது.

இத்தனை வேதனைகளுக்கும காரணமான போதை வஸ்து பாவனைக்கு அடிமையானவனை அதனிலிருந்து மீட்க உளவியல் ரீதியிலான வைத்தியமே சாத்தியமானதாகும்.

இளைஞர்கள், போதைப் பொருட்களின் பாவனை இன்பத்தின் இருப்பிடம் என ஏன் கருதுகிறார்கள்? கலையிலும் இலக்கியத்திலும், விளையாட்டிலும் ஏனைய துறைகளிலும் மனதைச் செலுத்தி இன்பங் காணப் பயிலாத இளைஞர்களே இதனால் ஈர்க்கப்படுகிறார்கள் சிறுவர்களாகிய நாம் சிறுவயது முதலே இத் துறைகளில் ஈடுபாடு கொண்டு மனதைப் பக்குவப் படுத்திக் கொள்ளப் பயில வேண்டும்.

நம்மை இப் பழக்கம் அணுகாதிருக்கவும் அப்பழக்கம் நம் சமுதாயத்தில் பரவாதிருக்கவும் இயன்ற வரையில் போராட வேண்டும் சமுதாயத்தை சாக்கடை யாக்கும் போதைப் பொருட் பாவனைக்குச் சாவுமணி அடிக்கச் சேர்ந்து முனைவோம்;

நீர்வையூர் வெ. சுதர்சினி

யாழ். இந்து ஆரம்ப மகளிர் பாடசாலையில்

# இரு மாடிக்கட்டடம் அமைக்க நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப மகளிர் பாடசாலையில் புதிய இருமாடிக்கட்டடம் அமைப்பதற்கு, முதற்கட்டமாக 10 இலட்சம் ரூபாவினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

அண்மையில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ரி. ஏ. துரைசிங்கம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாடசாலையில் புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதி உதவி கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தனர்;

இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளார்;

(உ)

# அவசரகாலச் சட்ட நீடிப்பு ஜே.வி.பி கைகளில்

(கொழும்பு)

இம்மாதம்அவசரகாலச் சட்டம்மீதான விவாதப்பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது அரசாங்கத்தில் பாரிய பிரச்சினை உருவாக்கவுள்ளதாகஅரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த மாதம் அவசரகால சட்டப்பிரேரணை ஒருவாக்கினால் மட்டுமே வெற்றியைத் தந்தது.

இப்பொழுது முஸ்லிம் காங்கிரஸ் பிளவுற்று ஏழு உறுப்பினர்கள் அரசை விட்டு வெளியேறியதை அடுத்து, அவசரகால நீடிப்புப் பிரேரணைக்கு ஜே. வி. பி ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே அப் பிரேரணை வெல்லக்கூடியது என சந்திரிகா கூறிஇருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்;

(வ)

# பெண்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக நினைப்பது தவறு

## தமிழ் ஆசிரியர் சங்க செயலர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

பெண்கள சமுதாயத்திற்கு இன்று எவ்வித மான தடைகளும் இல்லை. தமது அடிப்படை உரிமைகளுக்கு, நலன்களுக்கு தடை இருப்பதாக இவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் இது தவறு;

இவ்வாறு தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலர் த. மகாசிவம் தெரிவித்தார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் இடம்பெற்ற 'சமுதாயத்தில் ஆண்கள் பெண்களுக்கான சம வாய்ப்பு' என்னும் இரு நாள் கருத்தரங்கின் தொடக்க நாளான கடந்த சனியன்று உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று பெண்களின் வளர்ச்சி மிக உயர்ந்த நிலையில் செல்கின்றது. இதனை திட்டமிட்டு சில ஆண்கள் அவர்களின் வளர்ச்சியை மழுங்கடிக்கின்றனர். இன்று பல்கலைக்கழக அனுமதியில் பெண்கள் 60% உள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்குபற்றிய பெண்கள் ஆய்வு அபிவிருத்தி நிலைய யாழ். கிளைப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் உரையாற்றும் போது பெண்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அது மனித உரிமைகள் மீறல்களாகவே கருதப்படும் என 1993 ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற பெண்கள் தொடர்பான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இன்று சமுதாயத்தில்பெண்கள் ஏகப்பட்ட துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஒரு பெண் ஒரு ஆணுடன் கதைத்தால் கூட சந்தேகத்துடன் பார்க்கும் சமுதாயம் எங்கள் நாட்டில் உண்டு.

அதுமட்டுமின்றி ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்றால் அவர்களை ஒரு அசாதாரண நிலையில் பார்க்கும் நிலை எம் மத்தியில் உண்டு. இவ்வாறு துன்பப்பட்ட பெண் எப்படி ஒரு நிம்மதியான சூழலில் வாழ முடியும் என ஆக்ரோஷமாகக் கேள்வி எழுப்பினார்.

(க-10)

# அரசே முழுப்பொறுப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர் சிவராமுக்கு (தராகி) ஏதாவது உயிராபத்து ஏற்படுமானால் அதற்கானமுழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டுமென அவருக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

(உ-43)

# ஆறுமுகம் தொண்டமான் திடசங்கற்பம்

(கொழும்பு)

இன்று நாட்டில் நிலவும் அரசியல் சூழ் நிலைக்கேற்பவே தொழிலாளர் காங்கிரஸ் முடிவுகளை எடுக்கும் என்று அக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பொகவந்தலாவையில் 65 இலட்சம் ரூபா செலவில் நீர் விநியோகத்திட்டம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்; மலையக மக்களின் எதிர் காலத்தைக் கருதியும் அமரர் தொண்டமான் காட்டிய வழியிலும் தாம் செயற் படப் போவதாவும் உறுதியளித்துள்ளார். (உ-5)

## கும்பாபிஷேகம்

(கல்வயல்)

புலோலி மேற்கு கூவில் ஒல்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரசுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(உ-111)

# இராஜினாமா

[கோப்பாய்]

வலி கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் எஸ். ஏகாம்பரநாதன் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்; அண்மையிலேயே இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-79)

# விரைவில் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினாலும், தமிழ்க்கட்சிகளினாலும் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பமிடவில்லையாயினும் தீர்மானம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்று முஸ்லிம்காங்கிரஸ் கூடி தீர்மானிக்கும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

## ஜனா. தலைமையில் அமையும்

# தேசிய அரசு தேசியப் பிரச்சினையைத் தீர்க்காது

(கொழும்பு)

தேசிய அரசு அமைப்பது தொடர்பான கோரிக்கைகளை அடியோடு நிராகரித்த ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த காமினி அத்துக்கோறளை இன்றைய நெருக்கடியான கட்டம் ஜனாதிபதியின் திறமையின்மையாலேயே எழுந்துள்ளது. அவ்வாறிருக்க மீண்டும் அவர் தலைமையில் அமையக்கூடிய தேசிய அரசு எவ்வாறு தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என வினாவெழுப்பியுள்ளார்.

(உ)

# நீர்மட்டம் குறைவதால் மின்உற்பத்தி பாதிப்பு

(கொழும்பு)

மின்வலுவை உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர்மட்டம் வெகுவாக குறைந்து விடுவதாகவும் இதனால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக இனி வரும் நாட்களில் நிலைமை மேலும் மோசமாகக்கூடும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

இதனால் அதிக செலவில் அனல்மின் உற்பத்தி நிலையங்களை முழு அளவில் பயன்படுத்த நேர்ந்துள்ளதாகவும்.

இதனால் மின்சாரத்தை அளவுடன்பயன்படுத்துமாறும் மின்பாவனையாளர்களை இலங்கை மின்சாரசபை கேட்டுள்ளது;

(செ)

# மடுமாதா பெருநாள் இம்முறை மட்டுஆயரினால்

(வவுனியா)

வடகிழக்கிலிருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் ஏராளமான மக்கள் கலந்து கொள்ளும் மடுமாதாவின் இவ்வருட பெருநாள் திருப்பலிப் பூஜைகளை மட்டக்களப்பு திருமலை மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஒப்புக்கொடுக்கவுள்ளார்;

மன்னார் ஆயர்பேரருட் திரு இராயப்பு யோசப் அவர்கள் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டுள்ளதால் பெருநாள் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக மட்டு-திருமலை ஆயர் இம்மாதம் 30 ஆம் திகதி வன்னி செல்லவுள்ளார்;

மடு அன்னையின் வருடாந்த பெருநாள் யூலை 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது

(செ-8)

## பிரதம தளபதி

# பதவி கைமாறுமா? விரைவில் விடை தெரியும்

(கொழும்பு)

பாதுகாப்பு படைகளின் பிரதம தளபதி ஜெனரல் ரோஹான் தலுவத்தைவிரைவில் நாடு திரும்பிதனது பணிகளை மேற்கொள்வார் என நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இவரது பிரதம தளபதி பதவி ஜெனரல் ஜானக பெரேராவுக்கு வழங்கப்படவிருப்பதாக முன்பு ஊகங்கள் பரவலாக இருந்தகாரணத்தினாலேயேஇவர்காலவரையறையற்று, வெளிநாட்டில்தங்கியிருப்பதாக ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தது;

(உ)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ ஆபத்தான அழகிய செடிகள்

வீடுகளை அலங்கரிக்க, வீட்டு முற்றத்தில் செடிகள், கொடிகள் வளர்ப்பது உலகெங்கும் பரவலாக உள்ள வழக்கம் தான். ஆனால் அமெரிக்க வீடுகளில் அழகுக்காய் வளர்க்கும் சில செடி இனங்கள் மனிதர்களின் கை, கால்களைக் கூட கடித்து இரத்தத்தை உறிஞ்சி விடும் பயங்கர ஆற்றல் கொண்டன வென்றால் ஆச்சரியமாக இல்லையா?

ஆம்! 'கார்னிவோரஸ்' என்னும் இந்த மாமிசம் தின்னும செடிகளிற்கு அருகில் அசந்துபோய் கொஞ்ச நேரம் இருந்து விட்டால் அந்தளவும்தான் கைகால்களை குதறிவிடுமாம்.

சிறிய உயிரினங்களை பிடிப்பதற்கென்றே இயற்கையான அமைப்புக்களை உடைய இச் செடியை வீடுகளில் வளர்க்க வேண்டாம் என்று அரசு அறிவித்தாலும் அமெரிக்கர்கள் கேட்டால் தானே. ஆபத்தில் தான் அழகு இருக்கின்றது என்பது அவர்களின் வாதம்.

### ★ சவர்க்காரத்தின் சரித்திரம்

இன்று அனைத்துலகினதும் அத்தியாவசிய தேவையாகிய சவர்க்காரத்தின் தோற்றம் இற்றைக்கு 2000 ஆண்டுகளின் முன்னரே ஆரம்பித்து விட்டது என்பது ஆச்சரியம் தானே?

ஆதிகால மக்கள் தங்கள் உடலை சுத்தம் செய்ய ஒலிவ் எண்ணெய், பழச்சாறுகள், பல தாவர சாம்பல்கள் என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளார்கள். தற்போது பயன்படுத்தப்படும் சவர்க்காரம் பற்றிய குறிப்புக்கள் கி.பி. முதல் நூற்றாண்டிலே காணப்படுகின்றதாம்.

பாம்ப்பேயி என்ற இடத்தில் அகழ்வாராய்ச்சி செய்த போது நவீன சோப்புகளைப் போன்ற மாதிரிகள்கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுடன், ரோமன் எழுத்தாளர்பிளினி என்பவரின் குறிப்பில் மென்மையான சோப்பு; கடின சோப்பு மற்றும் தலை முடி சோப்பு என்று பல தகவல்கள் உள்ள தென்றால் பாருங்களேன்.

அவதானி

## பூட்டானில் தங்கியுள்ள இந்தியத் தீவிரவாத அமைப்புக்களை வெளியேற அமெரிக்கா பணிப்பு

(திம்பு)

பூட்டானில் முகாம்களை அமைத்து தங்கியுள்ள இந்திய தீவிரவாத அமைப்புக்களுடன் பேச்சு நடத்தி வரும் அமெரிக்க அரசு அமைதியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு தீவிரவாத அமைப்புக்களை கேட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்தியாவின் அஸாம் மாநிலத்தின் உல்பா மற்றும் போடோ தீவிரவாதிகளை இந்தியப்படையினர் 1990 ஆம் ஆண்டு முற்றுகையிட்டதையடுத்து பூட்டானின் தெற்கு காடுகளில் இந்த அமைப்புக்கள் முகாமிட்டுள்ளன.

இந்திய பூட்டானியபிரஜைகள் ஆவணம் எதுவுமின்றி சென்று வரும் நிலையில் 50 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இருதரப்பு உடன்படிக்கைகளை இவ்வமைப்புகள் சாதகமாகப் பயன்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த தீவிரவாத அமைப்புகளால் பூட்டானின் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டு வருவதையடுத்து பூட்டான் படையினருக்கு தீவிரவாதிகளை எதிர்த்துப் போராட தீவிர பயிற்சி நடத்தப்பட்டு வருவகிறது.

இதற்கான பெருமளவு ஆயுதங்களை இந்தியா பூட்டானுக்கு கொடுத்துள்ளது.

இவ்வமைப்புகளை அமைதியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு பூட்டானிய மன்னர் ஜிக்மே சிங்யே வாங்சுக்' கேட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## தாஜ்மஹாலை பராமரிக்க டாட்டா முன்வந்துள்ளது

(இஸ்லாமபாத்)

தாஜ்மஹாலை அண்டிய பிரதேசங்களில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தீவிரவாதச் செயல்களை அடுத்து அப்பகுதியை பாதுகாப்புடன் பேணுவதற்கும் தாஜ்மஹாலைச் சிறந்த முறையில பராமரிப்பதற்குமான பொறுப்பை டாட்டா நிறுவனம் ஏற்க முன் வந்துள்ளது

இந்த வகையில் இந்திய அரசிற்கு உதவ முன்வந்த டாட்டா நிறுவனத்தின் வரவை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வரவேற்றுள்ளதுடன் டாட்டா நிறுவனத்திற்கு தாஜ்மஹாலைப் பராமரிப்பதற்கு தனது அரசு போதிய உதவிகளை வழங்குவதற்கு தயாராக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

(உ-9)

## உலக தரிசனம்

## மீண்டும் ஜனநாயகவழிக்கு பாகிஸ்தான் திரும்புகின்றது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் மீண்டும் ஜனநாயக வழிக்கு திரும்பி வருகிறது என்று இஸ்லாமாபாத் செய்தி ஏடுகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளராகஇருந்து ஜனாதிபதியான ஜெனரல் பேர்வேஷ்முஷாரப் நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளையும் ஆலோசனைக்காக அழைத்திருக்கிறார்.

ஜெனரல் முஷாரப்பின் இந்தியப் பயணத்தின் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவதற்கு உறுதுணையாகவே சர்வகட்சிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடுத்திருக்கிறார்.

புதன் கிழமை நடைபெற இருக்கும் சர்வகட்சிக் கூட்டத்தையடுத்து மதத்தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பகுதிகளின் தலைவர்களையும் ஜெனரல் முஷாரப் சந்திக்க இருக்கிறார்.

சர்வாதிகாரியாக விளங்கிய முஷாரப் ஜனநாயக வழிக்கு ஆட்சியை இட்டுச் செல்லும் முதற்படி இதுவாகுமென்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

[து]

## இஸ்லாம்மதத்தை அவமதித்த படத்தை திரையிட்ட சினிமா அரங்குமீது தாக்கு

(புதுடில்லி)

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள சினிமா அரங்கம் ஒன்று அலித்தீனா என்ற கடும் போக்குத் தீவிரவாதக் குழுவினரால் தாக்கப்பட்டதை அடுத்து அக்குழுவைச் சேர்ந்த 10 பேரை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

''கதர் எக் பிரேம் கதா'' (கிளர்ச்சி ஒரு காதல் கதை) என்ற ஹிந்திப்படத்தில் உள்ள சில காட்சிகள் இஸ்லாம் மதத்தை அவமதிப்பதாகவுள்ளதால் இச் சினிமா அரங்கத்தை தாம் தாக்கியதாக அத் தீவிரவாத அமைப்புக் கூறியுள்ளது.

இந்தியாவில் இந்தப்படத்திற்கு எதிராக நடத்தப்பட்ட மிகப்பெரிய இரண்டாவது ஆர்ப்பாட்டம் இது என பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த வாரம் இப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணியின் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.

(உ-9)

## பதிவுகளை மேற்கொள்ள 6 மாதகால அவகாசம்

(லண்டன்)

பஹ்ரைனில் உள்ள வெளிநாட்டவர்கள் தம்மை சட்ட பூர்வமாக பதிவுசெய்து கொள்வதற்கான கால எல்லையை 6 மாத காலத்தால் நீடிப்பதென பஹ்ரைன் அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

கடந்த ஆண்டு 3 மாதகால அவகாசம் வழங்கப் பட்ட போது 33 ஆயிரம் வெளிநாட்டவர்கள் அதன் மூலம் பயனடைந்ததாக குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பஹ்ரைனில் மொத்த சனத் தொகையான 6 லட்சத்து 60 ஆயிரம் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்திய உபகண்டம் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இருந்து சென்று குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## முஷாரப் பார்வையிடுவார்

(புதுடில்லி)

விரைவில் இந்தியா செல்ல இருக்கும் முஷாரப் பழைய டில்லியில் தான் பிறந்த இல்லத்தையும் சென்று பார்வையிட இருக்கிறார் என்று இந்திய செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

(து)

## பசிக் கரையோரம் அரிச்சூபாவில்பூமி அதிர்ச்சி மூவர் பலி ;45 பேர் காயம்

(அன்காறேஜ்)

பசுபிக் கரையோரம் அமைந்துள்ள பெருவில் பகுதியில் பாரிய பூமி அதிர்சசி ஏற்பட்டதில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் 45 பேர் காயமடைந்துள்ளனர்.

பெருவில் உள்ள அரிச்சூபா நகரமே இப் பூமியதிர்ச்சியில் பாதிக்கப் பட்டுள்ளது சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் இரண்டு குழந்தைகள் அதன் கீழ் அகப்பட்டுக் கொல்லப் பட்டதைக்கண்ட தாயும் அதிர்ச்சியால் பலியானதாகத் தெரிய வருகிறது.

கடற்கரைப் பகுதியில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதால் பாரிய இழப்பு ஏற்படவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(செ-7)

## இராணுவத்தை விட்டு தப்பி ஓடி 7 வருடம் வனவாசமிருந்த ரஷ்ய இராணுவ வீரர்

(மொஸ்கோ)

இராணுவத்தில் இருந்து தப்பிஓடிய ரஷ்ய இராணுவ வீரர்ஒருவர் 7 வருடத்தின் பின்னர் காட்டில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளார்.

சைபீரியப் பகுதியில் இராணுவ வீரராக கடமையாற்றிய போது சக வீரர்களால் மோசமாக நடாத்தப் பட்டதையடுத்து 1994 ஆம் ஆண்டு இவர் இராணுவத்தில் இருந்து காட்டுக்குள் தப்பி ஓடியுள்ளார்.

கபசட்கா என்னும் பயங்கரமான காட்டுபபகுதியில் குடிலொன்றை அமைத்து இந்த இராணுவ வீரர் 7 வருடங்களாக தன்னந்தனியாக வசித்து வந்ததாகவும், அப்பகுதிக்கு கரடி ஒன்றைத் துரத்திச் சென்ற வேட்டைக்காரர்களால் தற்போது இவர் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-9)

## பேரு நாட்டுக்கு பெருஞ் சவாலாயிருந்த லாதிமிரோ கைதானார்

(லண்டன்)

பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் புரிந்து பேரு நாட்டைக் கதி கலக்கிய முன்னாள் உளவுத்துறைத் தலைவர் லாதிமிரோ மொன்டிகினோ நேற்று முன்தினம் இராணுவ உளவுத்துறை அதிகாரி களினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

வெனிசுலாவில் வைத்து சிறைப்பிடிக்கப்பட்ட அவரை விரைவில் நாடுகடத்தப் போவதாக பேரு நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்பயங்கர குற்றவாளி கடந்த ஆண்டு பேருவில் இருந்து தப்பிச் சென்று பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்து தனது உருவத்தை மாற்றியிருந்தாரென்று கூறப்பட்டது அவரை உளவுத்துறை அதிகாரிகள எவ்வாறு சிறைப்பிடித்தனர் என்பதை அரசு கூற மறுத்து வருகிறது.

(உ 9)

## பசுமாடு மிதிவெடியில் சிக்கியது

மேய்ந்து கொண்டிருந்த வேளை மிதிவெடியில் அகப்பட்ட பசு மாடு ஒன்றுபலத்த காயங்களுக்குள்ளானது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைச் சுற்றாடலில் அமைந்துள்ள இராணுவ முகாம் பின் பகுதிக்காணியில் கடந்த ஞாயிறு அப் பசு மேய்ந்து கொண்டிருந்த வேளையிலேயே இவ்வாறு நிகழ்ந்துள்ளது. (உ.23)

## வடமராட்சிக்கான தொ. பே. பரிவர்த்தனை நிலையம் திறந்துவைப்பு

(மந்திகை)

வடமராட்சிக்கான புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் கடந்த ஞாயிறன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதுவரைகாலமும் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை வளவில் அமைக்கப்பட்டிருந்த பரிவர்த்தனை நிலையமே, மாலு சந்தியிலிருந்த ரெலிக்கொம் நிறுவனத்திற்கு சொந்தமான சட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

வந்து துன்பத்தைப் போக்கிப் பின் துன்பம் வாராது -தடுக்கும் அறிவாளரது நட்பினை அரசன் விரும்பிக் கொள்க.

குறள்

# வலம்புரி

## பிரதமரின் சீற்றம்

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசத் துரோகம் எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா சீறிப்பாய்ந்துள்ளார்.

அவரின் சீற்றமும் குற்றச்சாட்டும் தனித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டும் பொருத்தமுடையதல்ல, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாகக் கையொப்பமிட்ட தமிழ்க் கட்சிகளுக்கும் சேர்த்தே கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளை அடியோடு அழித்தொழிக்க வேண்டும் அதற்காக பத்தாயிரம் சிங்கள இளைஞர்கள் படையில் சேர வேண்டுமென்றெல்லாம் பிரச்சாரம் செய்த பிரதமர், நாட்டின் இனப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்து பல்லின மக்களும் சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழவேண்டுமென்று இதுவரை எண்ணவில்லை.

இந் நாட்டில் கடந்த இருபது வருடங்களாக நடக்கும் யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகியுள்ள போதிலும், மீண்டும் யுத்தமேஎன்று அதிவேகப் பிரச்சாரம் செய்த பிரதமரைவிட அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டவர்கள் எவ்வகையில் தேசத்துரோகம் இழைத்தனர் என்பது கேள்விக் குறியே.

நாட்டின் பொறுப்பான பதவியில் இருக்கும் பிரதமர் எல்லா இன மக்களையும் இலங்கைத் தீவின் பிரஜைகள் என ஒரு கணம் எண்ணியிருந்தால், ஐக்கிய தேசியக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கே வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

மக்கள் தந்த சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி இனப்பிரச்சினையை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தீர்க்க முற்படாததால் இன்று தனது ஆட்சியைத் தக்கவைப்பதே பிரச்சினையாக மாறிவிட்டது.

ஒருகாலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்க்கவிடாமல் தடுத்த சிங்களக் கட்சிகளை தென்னிலங்கை மக்கள் ஆதரித்த காலம் போய், இப்போது இனப்பிரச்சினையை யார் உடனடியாகத் தீர்க்கமுன் வருகிறார்களோ அவர்களுக்கே மக்களின் வாக்கு என்பதாகக் கதை மாறிவிட்டது.

# மணங்கமழும் மலர்களின் பாவனையினால்

# மருத்துவப் பயன்கள் பலவற்றைப் பெறலாம்

## மருத்துவ விளக்கம்

மலர்கள் என்றால் மென்மையானவை, அழகானவை, தெய்வீகத் தன்மையுடையவை என்பது யாவரும் அறிந்ததாகும்.

இந்த மலர்கள் பலவும் அதி அற்புதமானவையாகவும், வாசனையுடையவையாகவும் அழகியற்துறையில் பெருஞ் சிறப்பிடம் பெறுபவையாகவும் திகழ்கின்றன.

### கருத்திற் கொள்ளாமை

மலர்த்தோட்டங்கள், மலர் மாலைகள், மலர்க்கொத்துக்கள், மலர்ச்செண்டுகள், மலர் வளையங்கள், மலர்த் தட்டுக்கள் என மலர்கள் பல்வேறு பட்டவகையில் மக்கள் மனதைக் கவர்வனவாகவுள்ளன.

ஆயினும் மலர்கள் மருத்துவ ரீதியாக பயன்படும் சிறப்பை அறிந்து - அதனைப் பயன்படுத்துவோர் மிகச் சிலரேயாவர். மருத்துவத் தன்மைவாய்ந்த மலர்களைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய மருத்துவச் சிறப்பு மிக்க மலர்களை நாம் தெரியாமல் இருப்பதும் தெரிந்தும் இயற்கைக் குணச் சிறப்புடைய இவற்றை நாம் கருத்திற்கொள்ளாதிருப்பதும் இன்றைய நிலையில் பெரும் துர்ப்பாக்கியமேயாகும்.

### மருத்துவத்துறை மலர்கள்

அதிக சிரமமின்றி எமக்குக் கிடைக்கக் கூடிய வாழைப்பூ, கறிமுருங்கைப்பூ, ஆவரசம்பூ, செவ்வரத்தம் பூ, தேங்காய், கீரைப்பூ, சண்பகப்பூ, செம்பருத்திப்பூ, நந்தியாவர்த்தம்பூ, தும்பைப்பூ, தூதுவளை, மகிழம் பூ, மல்லிகைப் பூ, முல்லைப்பூ, வில்வப்பூ, மருதோன்றி, வேப்பம்பூ, றோசாப்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, அகத்திப்பூ, போன்ற மலர்கள் யாவும் அன்றாட வாழ்க்கையில் மக்கள் உடல் நலத்தை நன்கு பேணக்கூடிய மருத்துவ குணநலம் மிக்க அருமையான மலர்களாகும்.

அன்றாட வாழ்வில் நாம் வாழைப்பூ, செவ்வரத்தம்பூ, முருங்கைப்பூ, வேப்பம்பூ, என்பவற்றைச் சமைத்து உண்பதனால், சிறுநீர்ப் பிரச்சினைகள் குடற் சுத்தம், இரத்த சுத்திகரிப்பு, இரத்தோட்டம், வயிற்றுக்கோளாறுகள் என்பன சீர்செய்யப் படுகின்றன.

### குளிர்ச்சியூட்டுபவை

இதேபோன்று ஆவரசம்பூ, நந்தியாவர்த்தம்பூ, தூதுவளை, குங்குமப்பூ, மல்லிகை, மருதோன்றி, றோசா போன்றன மண்டைக்குக் குளிர்ச்சியையும், கண்பார்வை, கண்ணுக்குக் குளிர்மையையும், உடல் வெப்பத்தைத் தகித்தலையும் கொண்டு சிறந்த மருத்துவ மூலிகைகளாகப் பயன்படுகின்றன.

இவ்விதமாக மக்களுக்கு வரக்கூடிய உடல் நோய்கள் யாவற்றிற்கும் நாம் நாளும், பொழுதும் காணும் மலர்கள் பலவும் பெரும் பயன் தரவல்லனவாக விளங்குகின்றன.

மேலும் பல்வேறு மலர்களிலும் தயாரிக்கப்படும் வாசனைப் பொருட்கள், எண்ணெய்கள், மருத்துவக்குழம்புகள் யாவும் பல்வேறு நோய்களையும், உடல் உபாதைகளையும் நீக்குகின்றன.

உதாரணமாக வில்வப்பூ பன்னீர், றோசாப்பூப்பன்னீர் தாழம்பூ அத்தர், குங்குமப்பூ, மகிழம்பூ மல்லிகைப்பூ வாசனைத் திரவியங்கள் எல்லாம் உடல் நலம் பேணுவதில் அன்றாடம் எமது வாழ்வில் பயன்படுவன. ஆயினும் இவற்றைப்பற்றி நாம் சிந்திப்பதே இல்லை.

நம் முன்னோர்கள் வாழ்க்கையில் இவற்றைத் தெரிந்து பேணிப்பாதுகாத்துப் பயன்படுத்தி வந்தனர். அதனால் அவர்கள் சுகதேகிகளாகப் பல்லாண்டு சீர் சிறப்பாக வாழ முடிந்தது. எனவே நாமும் இதனைக் கருத்திற்கொண்டு சிறந்த மருத்துவ மூலிகை மலர்களை இனங்கண்டு வாழ்விற் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ்வோமாக.

நீர்வை மணி

# மாணவர்கள் உள்ளத் தெளிவுடன் முழுமைபெற

# பாடசாலைகளும், சமூகமும் உதவ வேண்டும்

கல்வி மனிதனை முழுமையாக்குகிறது வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்ற கருத்துக்கள் தொன்று தொட்டு நம்மத்தியில் பேசப்பட்டு வருகின்றன இத்தகைய கல்விப் பாரம்பரியங்கள் பல்வேறு காலகட்டங்களில், பல பரிணாமங்களைப் பெற்று மிளிர்கின்றன. ஏட்டுக்கல்வி, மனனக்கல்வியென இருந்த சமுதாயம் மாறி இன்று. ஏட்டுக்கல்வியுடன் செயற்பாட்டு ரீதியான அனுபவக் கல்வியே சிறப்பும் மதிப்பும் பெற்றுள்ளது. அந்தவகையில், இன்று ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர் கல்விவரைகளரீதியான கற்பித்தல் உபகரணத்துடனூடான கல்வியே முக்கியம் பெற்று உலகத்தால் நுகரப்படுகிறது இவ்வறிவியலைக் கொண்டு மிளிர்ந்துள்ள கல்வியின் மேலதிக செயற்பாடுகளாக முறைசாராக் கல்வி, தொழில் ரீதியான கல்வி போன்றன விளைபயிர்களாக நமது கல்விச் சமுதாயங்களில் முற்றிப் பழுத்துக் கொண்டிருக்கின்றன,

### வளங்கள்

கல்வியின் தரங்களை இன்று நிறுவன ரீதியாகவும் (பாடசாலை) சமூகம் ஊடாகவும் வளர்த்து, இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து செயலுருவம் பெறுவதற்காக, அரசாங்கமும் (கல்வித்திணைக்களம்), கல்வியியலாளரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும். அந்த வகையில், பாடசாலையின் வளங்களும், சமுதாய வளங்களும் கல்வி முன்னெடுப்புக்கு பேருதவி புரிய வேண்டியுள்ளது. இன்றைய காலகட்டத்தை எடுத்து நோக்குகையில், பாடசாலை மட்டங்களில், அங்குள்ள மனிதவளங்கள், கற்பித்தல் சாதனங்கள் கொண்ட வளங்கள் மட்டுமன்றி, சமுதாயங்கள் பாடசாலையூடான இடைத் தொடர்புகள் என்பன மாற்ற முற்றும் அருகிக் கொண்டும் செல்கின்றன. எனவே, இவைகளின் மூலம் மாணவர்களின் செயற்பாட்டு ரீதியான கற்றல், திறமைகள் அருகி வருகின்றன. மேலைத்தேய கற்றலில் ஒவ்வொரு மாணவனும், சுயமாக இயங்குவதற்காக

**வ. சசிகுமார்**
(சுன்னாகம்)

பாடசாலை சமூக வளங்கள் திருப்தியாக உள்ளன.

### பிரச்சினைகளும், தேவைகளும்

கல்வியின் வளர்ச்சியை ஒருவன் எட்டவேண்டுமானால், அவனுக்கு உளரீதியான தெளிவும், உள்ளத்தூய்மையும் அவசியமாகின்றன அதே நேரம், அவன் வாழ்கின்ற, கற்கின்றசூழலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

ஒரு சிறு பிள்ளையின், உள ஆற்றலை வளர்க்க வேண்டிய பொறுப்பு, ஆரம்பத்தில்பெற்றோரையும், பின்னர் ஆசிரியர்களையும் சார்ந்தது. கலையுணர்வு அழகிய இருப்பிடம், மனோரம்மியமான சூழல், கண்களை: மனதைக் கவரும் உடைகள் என்பன சிறு பிள்ளைகளின் உற்சாகத்தைத் தூண்டி, கற்க வழிவகுக்கின்றன இவை எந்த ஒரு நிர்ப்பந்தத்தின் பேரில் பறிக்கப்படுகின்றதோ அங்கே அப்பிள்ளையின் ஆசையை, கனவை, எதிர்பார்ப்பை சிதறடிக்கச் செய்கின்றன. சமூகச்சூழல்களில் பிள்ளைகள் தவறான வழி நடத்தல்களால் பாரிய உளச் சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். மனரீதியில் கஷ்டப்படும் ஒருவர் தகுந்த உளச்சிகிச்சை பெறாதிருப்பின் அது பின்னர் பயங்கர வியாதிகளைக்கொண்டுவரும் ஆகவே கற்பவன் மட்டுமன்றி, கற்பிப்பவனும் ஒரே சூழலில்- ஏற்ற காரணிகளை அமைத்து உறவுகளை வலியுறுத்திக் கற்பித்தல் செயற்பாடு இடம் பெறுதல் அவசியமாகின்றது. அதிக வேலை செய்ததினால் ஏற்பட்டுள்ள களைப்பைப் போக்குவதற்காக பலர் பல களியாட்டங்களில் தம்மை ஈடுபடுத்துகிறார்கள். அதிகாரிகள் விஞ்ஞானிகள், கல்விமான்கள் ஆகியோர் உளளத்தை விரும்பி, இசை, நாடகம் நாட்டியம் போன்றவற்றில் பங்கெடுக்கிறார்கள்.

இதன் மூலம் ஏற்படும்தெளிவு ஒருவனை நல்ல பல படைப்புக்களை உருவாக்க விளைகின்றது. ஆனால் தெளிவற்ற நிலையிருப்பின் அவனால் சிறந்த படைப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியாது. ஆசிரியத்தொழிலானதுஇறைவனால் கொடுக்கப்பட்ட வரம், இங்கு, அன்பு பொறுமை, சகிப்புத்தன்மை நடுநிலைமை போற்றப்பட வேண்டும். இன்றைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும், மாணவர்களின் விருப்பு வெறுப்புக்கும் மாணவர்கள் ஆளுமை விருத்தியைப் பெற்று சிறப்படைவதற்கும். நிறுவன ரீதியான, சமூகரீதியான தொடர்புள்ள ஆசிரியர்கள் வேண்டப்படுகின்றனர். ஆரம்ப மாணவர்களை ஏற்ற பாதையில் இட்டுச் செல்வதோடு அவர்தம் இணைபாடவிதான செயற்பாடுகளைப் பெற்று உயர் நிலையைப் பெறுவதற்கு பாடசாலைச் சமூகம் களமமைத்துக் கொடுத்தல் அவசியம். இத்திறமைச் செயற்பாடு நமது சமூகத்திற்கும் நாட்டுக்கும் கல்வியியல் ரீதியான பாரிய முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை;

# எரிவாயுவின் விலை குறையும்

(கொழும்பு)

வீட்டுப்பாவனைக்குரிய எரிவாயுவின் விலையைக் குறைக்கும் தீர்மானம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது

நீர்கொழும்பில் நடைபெற்ற மகா பொல வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் றெஜி ரணதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்;

இந்தவாயு உற்பத்தியில் ஆர்வம் காட்டும் வர்த்தகர்களுக்கு அரசாங்கம் நிதி உதவிவழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்; [உ-7]

# நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் விவாதத்திற்கு எடுக்கக் கோரிக்கை

[கொழும்பு]

எதிர்க்கட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெகு விரைவில் விவாதத்திற்குஎடுக்குமாறு இரு அமைச்சர்கள் கூட்டாகக் கோரியுள்ளனர்.

அமைச்சர்களான அமரஸ்ரீ தொடங்கொட, சுசில் பிறேம் ஜயந்த ஆகிய இருவருமே இவ்வாறு கோரியுள்ளனர்.

இதனைத்தோல்வியடையச் செய்யப் பாடுபட வேண்டும் எனவும் இவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்;

இதேவேளை, பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா, அரசாங்கத்தைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என விரும்பும் ஒரே நபர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தான் என்று கூறியிருந்தமை இங்கு மனங்கொளளத்தக்கது, (உ)

## சந்திரிகா அரசு தொடர்ந்தும் தமிழரை ஏமாற்றுகிறது

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இதுவே எம்மைத் தூண்டியது

### விநாயகமூர்த்தி எம். பி. விளக்கம்

(துன்னாலை)

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார் என நாம் சந்திரிகா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போது மலைபோல் நம்பினோம்.

ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில் 20 ஆயிரம் பெண்கள் தமது கணவனை இழந்து விதவைகளாகியுள்ளனர்.

அத்துடன், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த வீடு வாசல்களை இழந்து நடுத்தெருவில் நின்று அல்லற்படுகின்றனர்.

கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஏற்பாட்டில் யாக்கரையில், இடம் பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டுபேசுகையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரையாற்றுகையில்,

தொடரும் பெண்கள் மீதான துன்புறுத்தல்களை கண்டும் காணாதவர் போல் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார்.

தாய்ஸ்தானத்தில் நின்று தட்டிக் கேட்பதற்குத் தவறிவிட்டார் என்பது வருத்தத்திற்குரியது

யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல் படுத்தி, புலிகளின் தடையை நீக்கி சமாதானப் பேச்சுக்களைத் தொடருமாறு பல தடவைகள் கோரியும் பயன் கிட்டவில்லை.

அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் அமுலில் உள்ள போது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த முடியுமா?

சந்திரிகாவை நாம் பண்டாரநாயக்காவின் மகளாக எண்ணாமல் விஜய குமாரதுங்கவின் மனைவியாக மதித்தோம். பேச்சுவார்த்தையிலும், தமிழர் நலனிலும் கரிசனை மிக்கவராகவே கருதினோம். அந்த நம்பிக்கை எல்லாம் காற்றிலே பறந்து விட்டது என்று குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து 4 மாதகாலத்துக்குள் சர்வாதிகாரம் படைத்த ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைப்பேன் எனவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பேன் எனவும் வாக்குறுதி வழங்கிப் பதவிக்கு வந்த அம்மையார் காலத்தைக் கடத்தினாரே தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் சாதகமாக வாக்களிக்கத் தீர்மானித்தோம் என்று தனது உரையில் மேலும் தெரிவித்தார். [உ-4!]

## இரு படையினர் பலி

முகமாலைப் பகுதியில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் நான்கு இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-5)

### இளம் தமிழ்

ராலும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக மருதானை பொலிஸில் அப்பெண் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து இரு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை உணவு விடுதி ஒன்றில் வேலைசெய்யும் இவ் இளம் பெண்ணை சோதனை செய்யவேண்டுமென்று கூறி அழைத்துவந்த பொலிஸாரே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### புலிகள்

படையினர் மீதே இக்கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இத் தாக்குதலின் போது ஆறு படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 23 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசதரப்பு அறிவித்துள்ளபோதும் காயமடைந்தோரினதும், கொல்லப்பட்டோரினதும் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்றுசுயாதீன செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

இக்கிளைமோர்த் தாக்குதலின்போது விடுமுறையில் வீடுகளுக்குச் செல்லவிருந்தவர்களே கொல்லப்பட்டும், காயமடைந்தும் இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரத்தினா தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களை பலாலி இராணுவ வைத்தியசாலையில் இருநது கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருதாகவும், படுகாயமடைந்த படையினர் சிலரின் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து படையினரின் பெற்றோர்கள் உறவினர்கள் வைத்தியசாலைகளில் திரண்டிருந்ததாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இக்கிளைமோர்த்தாக்குதல் மக்கள் மீளக்குடியேறாத-நடமாட்டமற்றபகுதியிலேயே இடம்பெற்றுள்ளதாகவும் அப்பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகளுக்குப்பின் தென்மராட்சிப் பகுதியில்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கிளைமோர்த் தாக்குதல் இதுவாகும். (வ

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஐ.தே. கட்சிக்கு வாய்ப்பளிக்குக!

### அஸ்கிரிய மகாநாயக்கதேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டையும் மக்களையும் பாதுகாத்து நாட்டின் அபிவிருத்திக்கு உகவுபவர்களே ஆட்சியமைக்க வேண்டுமென அஸ்கிரிய மகாநாயக்கதேரர் உடுகம புத்த ரத்கித தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பௌத்தஇளைஞர் சங்கத்தில் மறைந்த ஜனாதிபதி பிறேமதாசாவின் 77வது பிறந்ததின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாடு இன்று உள்ள நிலையில் இருந்து மீட்சிபெற ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிய ஆட்சியமைக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் தேரர் கேட்டுக்கொண்டார். (ந-5)

### நாட்டில்

பொதுமக்கள், மற்றும் அரசியல்கட்சிகள் தம் மத்தியில் நிலவும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டில் நிரந்தரசமாதானத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனைச்செய்யத் தவறின் நாட்டை அழிவில்இருந்துமீட்பது மிகவும் கடினமாகும் என்றும் கருத்து வெளியிட்டுள்ள தேரர்,

அரசில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரக்கூடிய உகந்த சூழ்நிலை இதுவல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். (வ)

### தமிழீழ

ருடனான சமர்களின் போது கைப்பற்றப்பட்ட பின்உதைப்பற்ற பீரங்கிகளைவிட 122-மி. மீ ரக மோட்டார்செலுத்திகளும் விடுதலைப் புலிகளினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றைவிட 23 மி. மீ. ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், தடயமின்றி நீருக்கடியில் தாக்குதல் நடத்தக்கூடிய நீர்மூழ்கிக் கருவிகளும் (CLOSE CIRCUIT DIVING EQUIPLMENT) புலிகள் வசம இருபபதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம)

# தனது உயிருக்கு ஆபத்து உள்ளது சபாநாயகர் அனுராவிடம் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் பதவியிலிருந்து விலத்தப்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவை ரவூப் ஹக்கீம் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விலக்கப்பட்டதால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு அரசில் கட்சித் தலைவருக்கு இருக்க வேண்டிய பாதுகாப்புக் கூடதனக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்த ரவூப்ஹக்கீம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் உறுதியளித்துள்ளார். (வ)

## யாழ். மட்டு, வன்னிப் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டு பணிகள் நேற்று இடம்பெறவில்லை

[யாழ்ப்பாணம்]

நாடு பூராக நேற்று ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் மாவட்டத்திலும். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு மற்றும் வன்னிப் பிரதேசங்களில் திட்டமிட்டபடி நேற்று நடை பெறவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 348 கிரமா சேவையாளர் பிரிவுகளில் 122 கிராம சேவகர் பிரிவுகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. (ம)

### ரவூப்

தாளைபுதன்கிழமை வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

### கப்பல்...

நிலையங்களில் தமதுபெயர்களைப்பதிவு செய்து பயண நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க கடந்தவருடம் மேமாதத்தில் இருந்து இக்கப்பல்சேவையை 70தடவைகள் நடத்தியிருப்பதாகவும் அதில் 57ஆயிரம் பயணிகள் பிரயாணம்செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### ஆர்ப்பாட்டம்

மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது அசம்பாவிதங்கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுவதால் அதனைத் தடுப்பதற்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (வ)


**ராஜா**
**யாழ்ப்பாணம்**
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2 00
5 00 [பு. நே.]
(கி-2125)



**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜயகாந்,
மீனா
நடித்த
**சேதுபதி IPS**
தினசரி [ரீலீஸ்]
11-00, 2-30 [பு நே]
(சனி, ஞாயிறு தினங்களில் 6 மணிக்கு விசேட காட்சி காண்பிக்கப்படும்
(3264)


### யாழ். புனரமைப்புக்கு

விருததி புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 800இலட்சம ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்து வந்துள்ளார்.

பொது அமைப்புகளின் திட்டங்களுக்கு இந்நிதியு தவி கட்டம கட்டமாக வழங்கப்பட்டு வருகிறது, (ந)

# முஸ்லிம்காங்கிரஸில் சேர்க்காவிடின் கட்சியைக் கைப்பற்றுவோம்!

### ஹிஸ்புல்லா சூளுரை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதியுயர் பீடத்தில்தன்னையும், பேரியல் அஷ்ரப்பையும் சேத்துக் கொளவதற்கு இம்மாதம 30ம் திகதி வரை காலக்கெடு விதித்திருப்பதாக முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இக்காலக்கெடு தொடர்பாக ஹிஸ்புல்லா மேலும் தகவல்தருகையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தக் காலக்கெடுவை உதாசினம் செய்யுமாயின் தேசிய ஐக்கிய முன்னணியில் இருந்த வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைக் கைப்பற்றுவோம் என்றும்அவர்சூளுரைத்தார்.

காத்தானகுடி மத்தியகலாசார நிலையத்தில்இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதிஅமைச்சர் ஹிஸ்புல்லா தொடர்ந்து அங்கு பேசுகையில்

இம்மாதம் 30ம் திகதிக்குள் தன்னையும், பேரியல்அஷ்ரப்பையும், முஸ்லிம்காங்கிரசின் உயர்பீடத்தில் சேர்த்துக்கொள்ளாவிட்டால் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைபபுத் தலைவர் பதவியை மீண்டும் ஏற்கப்போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

அரசுக்கெதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானத்திற்குஎதிராக பேரியல் அஷ்ரப் உட்பட நான்கு எம்பிக்கள்ஆதரவளிப்பர் என்றும் ஹிஸ்புல்லா கூறியுள்ளார். [வ]

இப் பத்திரிகை "வலம்புரி" அஸ்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.